அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 10/2026

எனது இலக்கம் : EST-6/06/TVL/5010
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2026.04.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபனவிதிக்கோவையின் I ஆம் வகுதியின் XIV ஆம் அத்தியாயத்தின் உபபிரிவு 8:2 இல் குறிப்பிடப்படும் மைல்கூலி கட்டணங்களின் அளவினை திருத்தம் செய்தல்**

தாபனவிதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் உபபிரிவு 8:2 இன் மீது தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அவ் உபபிரிவினை பின்வரும் பிரகாரம் திருத்துவதற்கு 2026.01.12 ஆந் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

8:2 **கட்டணத் தொகைகள் - தனிப்பட்ட மோட்டார் வாகனங்கள்** - இங்கு உபபிரிவு 8:1 இன் கீழ் மைல்கூலி பெறுவதற்கு உரித்துடைய உத்தியோகத்தரொருவருக்கு பெட்ரோல் அல்லது டீசல் மோட்டார் வாகனமொன்றிற்காக ஒரு கிலோமீட்டருக்கு ரூ. 40/= என்ற வீதத்திலும், மோட்டார் வாகனமொன்றிற்காக ஒரு கிலோமீற்றருக்கு ரூ. 10/= என்ற வீதத்திலும், மின்சாரத்தினால் செலுத்தப்படும் மோட்டார் வாகனமொன்றிற்காக ஒரு கிலோமீட்டருக்கு ரூ. 20/= என்ற வீதத்திலும் செலுத்தப்படும்.

03. அதன் பிரகாரம், தாபனவிதிக்கோவையில் மைல்கூலிக் கட்டணங்களின் அளவுகள் குறிப்பிடப்படும் அனைத்து இடங்களுக்காகவும் மேற்படி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அளவுகள் பிரதியீடு செய்யப்படல் வேண்டும்.

04. மைல்கூலி செலுத்துவதற்கு பதிலாக உரிய அதிகாரிகளின் மூலம் இதுவரையிலும் போக்குவரத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியதாக செலுத்தப்படுகின்ற மீளமைப்பு கொடுப்பனவுகள் இவ் ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தப்படல் கூடாது. தற்போது விசேட கடமைப் பயணங்களுக்காக மேலதிக எரிபொருள் வழங்குவதற்குப்

பதிலாக மைல்கூலி உரித்தாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், உரிய அதிகாரியினால் குறித்த உத்தியோகத்தர் அவ் கடமைப் பயணம் சென்றதாக தனிப்பட்ட ரீதியில் திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

05. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2026.04.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி இலக்கம் : 011-2699399
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-6-est@pubad.gov.lk